<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 62/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.1 P.W.1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | ஜெயமணி | தொழில் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | கோபாலகிருஷ்ணன் | ஜாதி |
| கிராமம் | : | | இனம் |
| தாலூக்கா | : | | வயது |
| Mail ID | : | | Mobile No. |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 22.01.2026.

<u>எதிரி ஆஜரின்மைக்காக மனு அனுமதிக்கப்பட்டது</u>

<u>முதல் விசாரணை</u>

1. நான் மானுப்பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு ஒரு மகள் உள்ளார் அவர் கோவையில் உள்ளார். கடந்த 21.01.2023 ம் தேதி 11.00 மணியளவில் என் கணவர் ஸ்பிலண்டர் வாகனத்தில் கடைக்கு போன போது 11.00 மணிக்க விபத்து நடந்ததாக 11.15 மணிக்கு எனக்கு பழனிசாமி என்பவர் போன் மூலமாக தகவல் கொடுத்தார் மானுப்பட்டி செட் என்ற இடத்தில் சிப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக கூறினார்கள். காரை ஓட்டியவர் பாண்டியன் என்றும் அவர் வேடசந்தூர் பகுதியை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். நான் கணேஷ் மருத்துவமனை சென்று போய் பார்த்தேன்.
2. என் கணவருக்கு காலிலும் தலையிலும் பலத்த அடிபட்டு இருந்தது

நெஞ்சு பகுதியில் அடிபட்டு இருந்தது என கூறினார்கள் கோவை செல்லுமாறு கூறினார்கள். பின்னர் எனது கணவரை மேல் சிகிசசைைக்காக கோவை செல்லுமாறு கூறினார்கள்.நாங்கள் கோவைக்கு எடுத்துச் செல்லும் போதே மூச்சு பேச்சு இல்லாமல் இருந்ததால் உடுமலை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தோம். அங்கு என் கணவர் இறந்து விட்டதாக மருத்துவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக காவல் நிலையம் செனறு எழுத்துமூலமான புகாரினை கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள விவரம் தெரியும். புகார் அசா.ஆ .1 என குறியீடு செய்யப்படுகிறது.

3. என் கணவர் ஒட்டி சென்ற வாகனத்தின் எண் 1212 ஆகும். காரின் எண் 4818 ஆகும். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள் உடுமலை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு பின் உடலை கொடுத்தனர் நாங்கள் பெறறு எங்கள் வழக்கப்படி நல்லடக்கம் செய்தோம்.இந்த விபத்திற்கு காரணம் கார் ஓட்டி வந்தவர் தான்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. உங்கள் கணவர் வீட்டில் இருந்து எத்தனை மணிக்கு கிளம்பினார் என்றால் சுமார் 10.00 இருக்கும். மானுபட்டியில் இருந்து விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ஊருக்கு தென்புறத்தில் உள்ளதா வடபுறத்தில் உள்ளதா என்றால் மானுப்பட்டியிலிருந்து தென்புறம். மூணாறு ரோட்டின் மெயின் ரோடு. உங்கள் தோட்டம் எங்குளளது என்னறால் மானுப்பட்டியில் இருந்து தென்புறம் உள்ளது. மானுபட்டியை ஊரில் கிழமையில் ரோட்டில் திரும்பி தென்வடல் ரோடு வளைவு உள்ளது என்றாலும் மூணாறு ரோடு சிறிய குறுகலான ரோடு என்றாலும் அங்கு குறுகலான வளைவு என்றாலும் எஸ் போன்று பெண்டு உள்ளது என்றாலும் சரிதான்.
2. உங்கள் தோட்டத்தில் இருந்து மானுப்பட்டிக்கு வர வேண்டும் என்றால் மெயின் ரோட்டில் எந்த திசையில் வரவேண்டும் என்றால் தெற்கிலிருந்து வடக்கு போக வேண்டும். புகாரில் தெற்கிலிருந்து வடக்கு வரும் பொழுது தான் விபத்து ஏற்பட்டதாக சொல்லி உள்ளீர்கள் என்றால் ஆமாம். உங்கள் கணவரை எங்கிருந்து எங்கே எதற்காக போனார் என்ற விபரம் சொல்லவில்லை என்றால் ஆமாம். கடைக்கு சென்றதாக சொல்லி உள்ள நிலையில் அது குறித்து போலிசார் விசாரணையிலும் புகாரிலும் சொல்லவில்லை

என்றால் ஆமாம்.

3. உங்கள் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் பி ஏ. உங்கள் வீட்டில் இருந்து செல்லும்போது அவர் தனியாக தான் சென்றார் என்றால் ஆமாம். வீட்டில் இருந்து செல்லும் பொழுது தலைக்கவசம் அணிந்தாரா என்றால் போட்டுக் கொண்டு சென்றார். அந்த சங்கதியை புகாரில் சொல்லவில்லை என்றாலும் போலீசார் விசாரணையிலும் அது குறித்து சொல்லவில்லை என்றாலும் சரியான ஞாபகம் இல்லை.
4. நீங்கள் என்ன வேலை செய்கிறீர்கள் என்றால் பி ஏ படித்துள்ளேன், விவசாயம் செய்கிறேன். உங்கள் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்ற விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் இருந்தது. உங்களை போலிசார் விசாரணை செய்த போது உங்கள் கணவரின் டிரைவிங் லைசென்ஸ் வாங்கிக் கொள்ளவில்லை என்றால் நான் எதுவும் கொடுக்கவில்லை அவர் பாக்கெட்டிலேயே வைத்திருப்பார்.
5. உங்களுக்கு எத்தனை மணிக்கு தகவல் கிடைத்தது என்றால் 11.15 மணிக்கு. யார் தகவல் சொன்னார் என்றால் பழனிச்சாமி. உங்கள் கணவருடன் யாரேனும் பயணம் செய்தார்களா என்ற விபரம் தெரிவித்தார்கள் என்றால் இல்லை. உங்களுக்கு தகவல் கொண்டபோது அந்த வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விவரம் சொல்லி விட்டார்களா என்றால் அப்போது சொல்லவில்லை பின்னிட்டு தான் நான் கேட்டு தெரிந்து கொண்டேன்.
6. புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சிஸ்டர் எழுதினார். எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. நீங்கள் சம்பவத்தை கேள்விப்பட்டவுடன் சம்பவ இடத்திற்கு சென்று விட்டு மருத்துவமனைக்கு சென்றீர்கள் என்றால் ஆமாம். நீங்கள் இந்த வழக்கு சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் காவல் நிலையத்தில் தான் புகார் கொடுத்தேன்.
7. அங்கு நடந்த விபரங்கள் நேரடியாக தெரியாது என்றாலும் வேறு ஒருவர் சொல்லி தான் தெரியும் என்றாலும் ஆமாம். உங்களது புகாரில் ரோட்டை உங்களது கணவர் கடக்க முற்பட்ட போது தான் விபத்து நடந்ததாக சொல்லி உள்ளீர்கள் என்றால் ஆமாம். உண்மையில் உங்கள் கணவர் சாலை விதிகளை பின்பற்றாமல் கவனக்குறைவாக இந்த வண்டியில் அவராக வந்து விழுந்து விட்டார் என்றால் இல்லை. நீங்கள் தவறுதலாக எதிரியின் மீது புகார் கொடுத்துள்ளீர்கள் என்றால் இல்லை.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala.B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No.62 /2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.3 P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அருணா | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | மதன் பிரகாஷ் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 22.01.2026

**முதல் விசாரணை**

நான் கோயம்புத்தூர் சிந்தாமணி புதூரில் வசித்து வருகிறேன். IT ல் வேலை செய்து வருகிறேன். என் அம்மா அப்பா மானுப்பட்டியில் வசித்துவந்தார்கள். அசா.1 எனது அம்மா ஆவார். வழக்கில் இறந்துபோனவர் எனதுஅப்பா ஆவார். கடநத 21.01.2023 ம்தேதி நானும் என் கணவரும் கோயம்புத்தூரில் இருந்த போது என் கணவருக்கு போன் வந்தது. என் அப்பாவிற்கு விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார்கள். நாங்கள் உடனே கணேஷ் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்தவர்கள் மேல் சிகிச்சைக்காக கோவை அழைத்துச் செல்லுமாறு கூறியதால் எனது அப்பாவை கோவைக்கு அழைத்துச் சென்றனர். வரும் வழியிலேயே பேச்சு மூச்சு இல்லாததால் மீண்டும் உடுமலை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதா கூறினார்கள். நாங்கள் கோயம்புத்தூரில் இருந்து புறப்பட்டு உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து பார்த்தோம். மருத்துவர்கள் எனது அப்பாவை பரிசோதித்து விட்டு இறந்து போய்விட்டதாக தெரிவித்தனர். இதுசம்பந்தமாக என் அம்மா புகார் கொடுத்திருந்தார். போலீசார் அங்கு வந்து விசாரணை நடத்தி பரிசோதனைக்கு பின் உடலை கொடுத்தனர் தாங்கள் எங்கள் வழக்குப்பபடி

நல்லடக்கம் செய்தோம். என் அப்பாவின் வண்டி ஸ்பிலண்டர் வாகனம். என் அப்பா பழம் வாங்க கடைக்கு சென்று விட்டு வரும் போது ஸ்விட் கார் வேகமாக வந்துமோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டோம். காரை ஓட்டியவர் பாண்டியன் என்றும் அவர் வேடசந்தூர் பகுதியை சேர்ந்தவர் என்றும் சொன்னார்கள். என் அப்பாவின் வண்டி எண் 1212 . கார் வாகனத்தின் எண் 4812 ஆகும். போலிசார் என்னை விசாரித்ததார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்</u>**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala.B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 62/2025 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | L.W.6 P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விஸ்வநாதன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராமசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 22.01.2026

**முதல் விசாரணை**

நான் அமராவதி நகரில் பெரும்பளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 22.01.2023 ம் தேதி அமராவதி நகரிலிருந்து விபத்தில் இறந்த கோபாலகிருஷ்ணன் என்பவரின் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனை செல்வதற்காக நானும் செந்தில் என்பவரும் பைக்கில் சென்று கொணடிருந்தோம். காவல் ஆய்வாளரும் போலிசாரும் மானுப்பட்டி செட் விபத்து நடந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். போலிசார் வரைபடம் வரைவதாகவும் அதற்கு சாட்சியாக இருக்குமாறும் கேட்டார்கள். நான் சுற்றி உளள இடத்தின் விவரத்தை உள்ளுர என்பதால் சொன்னோம். போலீசார் வரைபடம் வரைந்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள் நான் விவரங்களை தெரிந்து கொண்டு சாட்சிகள் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். பார்வை மகசர் அசா.ஆ. 2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்ன படித்துள்ளிர்கள் எனறால் பிளஸ் டு. விபத்தில் இறந்து போன

கோலபாலகிருஷ்ணன் என்ன உறவு என்றால் எனது மச்சான். உங்களை எங்கு வைத்து போலிசார் விசாரித்தார்கள என்றால் விபத்து நடந்த பகுதியான மானுப்பட்டியில் வைத்து. போலிசார் விசாரணையில் கோபாலகிருஷ்ணன் என்பவருக்கு விபத்து ஏற்படுத்தியவர் யார் என்று போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை அதனால் சொல்லவில்லை. பெரும்பள்ளத்திறகும காவல்நிலையத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் சுமார் ½ கி மீ இருக்கும் . சொன்ன தேதியில் சொன்ன மாதிரி காவல் ஆய்வாளர் ஆவணம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இறந்தவர் உங்கள் நெருங்கிய உறவினர் என்பதாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் சொல்கிறிர்கள் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala.B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.